# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2014/4 - 2017 අප්‍රේල් මස 11 වැනි අඟහරුවාදා - 2017.04.11

*2014/4 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 1/2012* (III)

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் பிரிவு 29 மற்றும் பிரிவு 61 (1) (ப) உடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மஹிந்த அமரவீர,
கடற்றொழில் நீர்வாழ் உயிரின,
வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2017, ஏப்பிறல் 05.

**கட்டளை**

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின், (செபலோபொலிஸ் சொன்னெராடி) தம்புவ மீன் இனங்களைப் பிடிப்பதைத் தடை செய்யும் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆளெவரும் இலங்கைக்குள் அல்லது இலங்கை நீர்ப்பரப்புகளுள் (செபலோபொலிஸ் சொன்னெராடி) தம்புவ மீன் இனங்களைப் பிடித்தல், உடைமையில் வைத்திருத்தல், இடம்பெயர்த்தல், கொள்வனவு செய்தல், விற்பனைக்காக காட்சிக்கு வைத்தல், விற்றல் அல்லது ஏற்றுமதி செய்தல் ஆகாது.

*4- 708*